| | | | |
|---|---|---|---|
| Headline | TNB's Deepavali Open House | | |
| MediaTitle | Tamil Nesan | | |
| Date | 26 Nov 2013 | Language | Tamil |
| Circulation | 45,000 | Readership | 124,000 |
| Section | News | Page No | 10 |
| ArticleSize | 614 cm² | Journalist | N/A |
| PR Value | RM 8,484 | | |
| | | | |





உதவித் தொகைகளைப் பெற்ற குழந்தைகளோடு டி.என்.பி. தலைவர்கள்.

# டி.என்.பி.யின் தீபாவளி திறந்த இல்ல விருந்துபசரிப்பு!



நிகழ்வில் கலந்துகொண்ட சிறப்பு பிரமுகர்கள் கேக் வெட்டியபோது...

**(செய்தி: ப.ராஜ்குமார், படம்: எஸ்.எம்.சுந்தர்)**
**கோலாலம்பூர்,நவ. 26-**
ஒவ்வோர் ஆண்டும் தவறாமல் தீபாவளி விருந்து நிகழ்ச்சியை நடத்தி வரும் டி.என்.பி. எனப்படும் தேசிய மின்சார வாரியம் நேற்று பங்சாரிலுள்ள அதன் தலைமையகத்தில் இந்த வருட தீபாவளி திறந்த இல்ல விருந்து பசரிப்பை மிகவும் பிரமாண்டமான முறையில் நடத்தியது.



நிகழ்ச்சியின் ஏற்பாட்டுக் குழுவினர்.



டி.என்.பி.யின் தலைவர்கள் குழந்தைகளுக்கு உதவித் தொகைகளை வழங்கும்போது.

விருந்துபசரிப்போடு மட்டும் நிறுத்தி விடாமல் ஆதரவற்றோர் காப்பகத்தில் வசிக்கும் சுமார் 200 குழந்தைகளுக்கு டி.என்.பி. உதவித் தொகையை வழங்கி சிறப்பு செய்தது. க்ரெஸ்த்தெஸ், செரிபு ஹராப்பான், ஸ்ரீ சாரதா தேவி இல்லம், கானாக் கானாக் மாத்தா ஆயிர் சிலாங்கூர் மற்றும் சுயாதீனமான வாழ்கை மற்றும் பயிற்சி மையம் ஆகிய ஆதரவற்றோர் காப்பகத்திலிருந்து வந்த குழந்தைகள் அந்த உதவித் தொகையை பெற்றுக் கொண்டனர்.

டி.என்.பி.யின் தலைவர் டான்ஸ்ரீ லியோ மோகி மற்றும் அவரது துணைவியார் புவான் ஸ்ரீ எலிசபெத் மோகி அந்த உதவித் தொகைகளை வழங்கினர். மேலும் அந்த விருந்துபசரிப்பில் டி.என்.பி. தலைமை நிர்வாக அதிகாரி டத்தோஸ்ரீ ஐ.அர் அஸ்மான் மொஹமட் அவரது துணைவியார் டத்தின்ஸ்ரீ நூட் அபிஸா அஹ்மாட் நோர், இயக்குநர்கள் வாரியத் தலைவர் டான்ஸ்ரீ ஹரி நாராயணன் அவரது துணைவியார் டத்தின் விமலா மற்றும் எரிசக்தி பசுமை தொழில்நுட்பம் மற்றும் நீர்வள அமைச்சின் துணைச் செயலாளர் டத்தோ படாருடின் மாஹ்யுடின் ஆகியோரும் அந்த விருந்து நிகழ்வில் கலந்து கொண்டனர்.

சுமார் ஐயாயிரம் பேர் கலந்து கொண்ட அந்த விருந்து நிகழ்வில் மலேசிய பங்ரா நடனக் குழுவும், இந்திராணி நடனக் குழுவும் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தனர். அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இசைக் குழுவினர் இதமான இசையை வாசித்து மனதை கவர்ந்தனர்.

Powered by: iSENTIA